

கனியால் மற்றப் பறவைகளைப்போல் நன்றாகப் பேச முடியவில்லை. அது சிறப்பாகப் பேச முயற்சி செய்யுமா? வாருங்கள், கனியின் கற்றல் பயணத்தில் நாமும் கலந்துகொள்வோம்!

ISBN 978-981-012-811-1

Marshall Cavendish Education

Ministry of Education
SINGAPORE

LIM / SCRAWL


என்னால் முடியும்!

MINISTRY OF EDUCATION

# என்னால் முடியும்!

மூலக்கதை
EMILY LIM

ஓவியர்
SCRAWL STUDIOS



# என்னால் முடியும்!

## இந்தப் புத்தகத்தை எவ்வாறு பயன்படுத்தலாம்?

விடாமுயற்சியோடு செயற்படும் பிள்ளைகள் வாழ்நாள் கற்றலில் ஈடுபடுகின்றனர்.

விடாமுயற்சி கொண்ட பிள்ளைகள் **முயற்சியைக் கைவிடாமல்** தொடர்ந்து **முயன்றுகொண்டே இருப்பர்.** அவர்கள், மற்றவர்களுக்கும் ஊக்கமளிப்பர். பிள்ளைகளின் சாதனைகளை மட்டும் பாராட்டாமல் அவர்களின் ஒவ்வொரு முயற்சியையும் ஆசிரியர்கள் பாராட்டி அவர்களை ஊக்கப்படுத்த வேண்டும்.

இந்தக் கதையின் முக்கியக் கதாபாத்திரம் விடாமுயற்சியுடன் செயற்பட்டுப் பேசக் கற்கும்போதெல்லாம் அதனுடைய அண்ணன் அதனை ஊக்கப்படுத்துகிறான். விடாமுயற்சியை அடையாளம் காணவும் அதன் மதிப்பை உணரவும் பிள்ளைகளுக்கு வழிகாட்ட இந்தக் கதையைப் பயன்படுத்திக்கொள்ளலாம். சில பரிந்துரைகள் பின்வருமாறு:

### விடாமுயற்சியை அடையாளம் காணவும் அதன் மதிப்பை உணரவும் பிள்ளைகளுக்கு உதவப் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம்:

- கனி ஏன் பேசுவதற்குச் சிரமப்பட்டது?
- கனி நன்றாகப் பேசுவதற்கு முயற்சி செய்தது என நீ நினைக்கிறாயா? உனக்கு எப்படித் தெரியும்?
  விடாமுயற்சியின் சில எடுத்துக்காட்டுகள்: கனி பேசப் பயிற்சி செய்ததும் அது **அண்ணனிடம் உதவி பெற்றதும்**
- விடாமுயற்சியுடன் பேச முயன்றதிலிருந்து கனி என்ன கற்றுக்கொண்டது?


### விடாமுயற்சியுடன் திகழ வேண்டுமானால் ஒருவருக்கொருவர் ஊக்கமளிக்க வேண்டும் என்பதைப் பிள்ளைகள் தெரிந்துகொள்வதற்குப் பின்வரும் கேள்விகளைக் கேட்கலாம்:

- கனி தெளிவாகப் பேசுவதற்குச் சிரமப்பட்டபோது மணி என்ன வார்த்தைகள் கூறி அதனை ஊக்கப்படுத்தியது?
- யாரும் கனிக்கு உதவாமல் இருந்திருந்தால் என்ன நடந்திருக்கும்?
- கதையின் இறுதியில், கனி எவ்வாறு மைனாவை ஊக்கப்படுத்தியது?



# என்னால் முடியும்!

மூலக்கதை: **Emily Lim**
ஓவியர்: **Scrawl Studios**



Ministry of Education
SINGAPORE



கனி ஒரு கிளி. அதன் குடும்பம் பெரியது.



கிளிகள் பல வண்ணங்களிலும் வடிவங்களிலும் இருந்தன.

எல்லாக் கிளிகளுக்கும்
ஒன்று மட்டும் பொதுவாக இருந்தது.



அவற்றிற்குப் பேசுவது என்றால் கொள்ளை ஆசை.





ஆனால், மற்றக்
கிளிகளைவிடக்
கனியின் நாக்குக்
குட்டையாக இருந்தது.

அதனால், அது பேசச்
சிரமப்பட்டது.



“கனி, நம் குடும்பத்தைச்
சேர்ந்தவன் தானா?”
என்று ஒரு கிளி
கேட்டது.

“ஒருவேளை அவன்
கிளியே இல்லையோ!”
என்றது மற்றொரு கிளி.




கனி முயற்சியைக் கைவிடவில்லை. ‘என்னால் முடியும். என்னால் நன்றாகப் பேச முடியும்’, என்று உறுதியாக நம்பியது. அது கடுமையாகப் பயிற்சி செய்தது.



கனி தன் அண்ணன் மணியிடம் உதவி கேட்டது.
“உனக்கு நான் உதவுகிறேன்,” என்றது மணி.

மணி கனியை வெளியே அழைத்துச் சென்றது.
அது கனிக்குப் பேசச் சொல்லிக் கொடுத்தது.
கனியும் மெல்ல மெல்லப் பேச ஆரம்பித்தது.




113A
114B





முதலில் கனி சில வார்த்தைகளை மட்டும் பயன்படுத்திப் பேச முயற்சி செய்தது. “ம்…நல்ல முயற்சி!” என்றது மணி.





பயிற்சிக்குப் பிறகு கனி அதிகம் பேச ஆரம்பித்தது.
அது ஒரே நேரத்தில் பல சொற்களைப் பயன்படுத்திப் பேசியது.
“மீண்டும்.... முயற்சி.... செய்வோம்,” என்றது கனி.




"நல்ல முயற்சி!" என்றது மணி.
அது கனியின் தோளில் தட்டிக் கொடுத்தது.



“இப்போது வாக்கியங்களில் பேசப் பழகுவோம்,”
என்றது மணி.






வாக்கியங்களில் பேசக் கனி சிரமப்பட்டது. ஆனால், அது முயற்சியைக் கைவிடவில்லை. ‘என்னால் முடியும்!’ என்று தனக்குள் சொல்லிக்கொண்டது.




சில நாள்களுக்குப் பிறகு, கனி ஓரளவுக்கு வாக்கியங்களில் பேச ஆரம்பித்தது. “இப்போது, நீ நன்றாகப் பேசுகிறாயே,” என்று மணி கூறியது.




இறுதியில், அது நீளமான வாக்கியங்களில் பேசியது. 'இனி என்னால் நன்றாகப் பேச முடியும்!' என்று அது மகிழ்ச்சி கொண்டது.



அதோ பாருங்கள்! கிளிகள்!



கனி தினமும் விடாமுயற்சியுடன் பயிற்சி செய்தது.



அது முயற்சியைக் கைவிடவில்லை.




“உன்னை நினைத்தால் எனக்குப் பெருமையாக இருக்கிறது,” என்றது மணி.




அவை மரத்திற்குத் திரும்பிச் சென்றன.



கனி நன்றாகப் பேசுவதைக் கேட்ட மற்றப் பறவைகள் ஆச்சரியப்பட்டன.



அங்கு ஒரு சிறிய மைனா இருந்தது.
அதுவும் பேசச் சிரமப்பட்டது.



“உன்னால் பேச முடியும்! முயற்சியைக் கைவிடாதே!” என்று கனி அதனை ஊக்கப்படுத்தியது.


112

## எழுத்தாளரைப்பற்றி

Emily குழந்தைகளுக்காகப் பல புத்தகங்களை எழுதியிருக்கிறார். கனியைப்போல அவரும் ஒரு காலத்தில் பேசச் சிரமப்பட்டார். விடாமுயற்சியினாலும் நண்பர்களின் ஊக்கத்தினாலும் அவர் தம்முடைய இயலாமையிலிருந்து மீண்டார். இப்போது அவர் மற்றவர்களுடன் பேசி மகிழ்கிறார்.

## ஓவியரைப்பற்றி

Scrawl Studios என்பது சிங்கப்பூரில் உள்ள ஓர் அசைவூட்டுப்பட நிறுவனம். அந்நிறுவனத்தினர் நாள் முழுவதும் வரைவது, வண்ணம் தீட்டுவது, பேசுவது, சிரிப்பது, கற்பனை சேர்ப்பது, பகல் கனவு காண்பது, கேலிச்சித்திரம் வரைவது போன்றவற்றில் தங்கள் நேரத்தைச் செலவிடுகிறார்கள்.